1993 பிப்ரவரி 9]

பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே, பள்ளி மாணவர்களும் இந்த வேளாண்மையிலே அக்கறை பெற வேண்டும் என்பதற்காகத் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே கல்வியிலும் வேளாண்மை ஒரு பாடத் திட்டமாக சேர்க்கப்பட இருக்கிறது என்பதனை உங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்

36—

நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, அம்மையநாயக்கனூர் ஆகிய இடங்களில் வீட்டுவசதி வாரிய வீடுகள் கட்டும் திட்டம்.

*9762—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, அம்மையநாயக்கனூர் ஆகிய இடங்களில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நிலக்கோட்டை மற்றும் வத்தலக்குண்டு ஆகிய இரு இடங்களில் வீட்டு வசதி திட்டங்கள் உள்ளன. அங்கு நிலம் கிடைக்கப்பெறுவதை ஒட்டி வீடுகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு செயற்படுத்தப்படும். அம்மைநாயக்கனூருக்கு இத்திட்டம் எதுவும் இல்லை.

முற்பகல் 10-45

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டையில் ஆயிரம் வீடுகள் கட்ட வேண்டுமென்று பல்லாண்டுகளாக எடுத்துவந்த முயற்சி இன்னும் நடைபெறவில்லை. அரசுக்கு எந்த இடம் தேவைப்படுகிறது என்று கருதுவார்களோ, அந்த இடத்தைச் சொன்னால், நிலம் வைத்திருப்பவர்களே, அதைக் கொடுப்பதற்குத்

[1993 பிப்ரவரி 9

தயாராக இருக்கிறார்கள். ஆகையினால், நம்முடைய இலாகாவின் மூலம், அதாவது வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக இருக்கக்கூடிய அதிகாரிகள் இதிலே சற்று முனைப்புக் காட்டாமல், நிலக்கோட்டையைப் பொறுத்தவரையில், வத்தலக்குண்டைப் பொறுத்தவரையில் சற்று முனைப்புக் காட்டாமல் ஏதோ வரட்டும், போகட்டும் என்று இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறதா என்கிற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இதைச் சற்று துரிதப்படுத்தி—48, 50 ஆபிஸ்களுக்கு மேல் நிலக்கோட்டையில் இருந்து கொண்டிருக்கிறது; வரக்கூடிய அதிகாரிகள் அங்கே தங்குவதற்கு முடியவில்லை; காரணம், வீடுகள் கிடைக்காத நிலை உள்ளது இந்த நடப்பு ஆண்டிலேயே விரைவிலே வீடுகள் கட்டித் தருவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர, நகராட்சி வீட்டுவசதித் திட்டத்தின் வாயிலாக நிலக்கோட்டை மற்றும் வத்தலக்குண்டு பகுதிகளுக்கு வீட்டுவசதி தேவைக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அப்படி விண்ணப்பங்கள் பெறப்படுகிற சமயத்தில் நிலக்கோட்டையிலிருந்து மொத்தமே 31 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டன, முதற்கட்டமாக. வெறும் 31 விண்ணப்பங்களை வைத்துக் கொண்டு, அந்த வீட்டுவசதித் திட்டத்தைச் செயல்படுத்த முடியாது. ஆகவே, இரண்டாவது கட்டமாக, நிலக்கோட்டையிலே வீட்டுவசதித் தேவைக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம், வீணான சந்தேகம் என்று கருதுகிறேன். விண்ணப்பங்களே பெறப்படாத சமயத்திலே அங்கு வீடுகள் கட்டுகிற சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் என்னை நேரில் சந்தித்து அந்தக் கோரிக்கையை வைத்த போது, நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன். உத்தரவு இட்டபிறகு தான், இரண்டாவது கட்டமாக நிலக்கோட்டைப் பகுதிக்கு விண்ணப்பங்கள் பெறுவ்தற்கு call for செய்யப்பட்டுள்ளது. இரண்டாவதாக, வத்தலக்குண்டு பகுதிக்கு முதற்கட்டத்திலே பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 112. அங்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி, வத்தலக்குண்டு, பகுதிகளிலே மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது நிலம் வைத்து இருப்பார் என்று சொன்னால், அதை வாரியத்திற்கு வழங்குவார் என்று சொன்னால், இன்னும் ஒரு மாதத்திலே அங்கு வீடு கட்டுகிற பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1993 பிப்ரவரி 9]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வத்தலக்குண்டில் நிலம் வைத் திருக்கவில்லை. என் சொந்த நிலத்திலே 12 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திற்குத் தானமாகக் கொடுத்திருக்கிறேன். என் ஊரிலேயே வீடு கட்டுவதாக இருந்தால் கொடுக்கிறேன். இப் போது வத்தலக்குண்டிலே 112 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, கடையாபட்டியிலே ஓரமாக புறம்போக்கு நிலம் இருக்கிறது. அதையே எடுத்துக் கொள்ளலாம், நிலக் கோட்டையிலேயும் நிலம் கொடுப்பதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், வீட்டுவசதித் துறையால் அவ்வாறு வீடுகள் கட்டக்கூடிய இடங்களிலே அந்த வீடுகள் சரியாகக் கட்டப்படுவதில்லை. அதேமாதிரி திண்டுக்கல்லிலே கட்டிய வீடுகளை யாருமே, வீடு விழுந்தவர்கள்கூட, அந்த வீடு எங்களுக்கு வேண்டாம் ; சரியாகக் கட்டவில்லை என்ற எண்ணம் இருக்கிறது. ஆகை யால் யாருக்கு வீடு வேண்டுமோ, அவர்களிடத்திலே லோன் கொடுத்து, அவர்களே, வீடுகள் கட்டிக் கொள்வதற்கான ஒரு சூழ்நிலை உருவாகுமேயானால்தான் இந்த வீடுகளைக் கட்டுவதற்கு மக்கள் அதிகமாக முன்வருவார்கள். ஒரு முறை 606 பேர்கள் பணம் கட்டினார்கள், நிலக்கோட்டையிலே, வீடுகள் வேண்டுமென்று. இப்போது, அந்த வீடுகள் சரியாகக் கட்டப்படவில்லை என்ற காரணத்தினால்தான், 31 பேர் களோடு நின்று கொண்டிருக்கிறது என்பதை நான் தெரி வித்துக் கொள்வதோடு, இரண்டு ஊர்களிலுமே வீடுகள் கட்டுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அந்த வேலையைச் செய்து கொடுப்பதற்கு, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் தயாராக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் விரைவிலே அதன்மீது நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே, திண்டுக்கல் பகுதியிலே வீடுகள் தரமாகக் கட்டப்படவில்லை என்ற குற்றச் சாட்டை நான் மறுக்கிறேன். காரணம், அறிவார்ந்த அனு பவம் மிக்க மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி பொன் னம்மாள் அவர்களே, திண்டுக்கல்லிலே ஒரு மனுவைக் கொடுத்து, அங்கு வீடு வேண்டுமென்று என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் வீடுகள் தரமாக இல்லை என்று சொன் னால், வீடு கொடுக்கப்பட வேண்டுமென்று இவர் எப்படிக் கேட் டார் என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில், இந்தத் துறையைப் பொறுத்தவரையில், திண்டுக்கல் பகுதி யிலே, அரசுக் கோட்டாவிலே இருக்கிற வீடுகளுக்கே, 4 வீடு களுக்கு, 400 மனுக்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அந்த

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வீடுகள் தரமில்லை என்று சொன்னால், நிச்சயமாக இவ்வளவு மனுக்கள் வரவேண்டிய அவசியம் இல்லை. வத்தலக்குண்டு பகுதியைப் பொறுத்தவரையில் இங்கு நிலங்களைக் கையகப் படுத்துவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் கிறது. நிலக்கோட்டையிலே 31 விண்ணப்பங்கள் மட்டுமே பெற்ற காரணத்தினால்தான் அங்கு கைவிடப்பட்டது. இரண் டாவது கட்டமாக விண்ணப்பங்கள் பெறுவதற்குண்டான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் வீட்டுவசதித் தேவைக்கான விண்ணப்பங்களைக் கொடுப்பார்களேயானால் இந்தத் திட்டம் செயல்படுத்தப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 37, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

37—

ஆரணி தொகுதியில் முதியோர், உடல் ஊனமுற்றோருக்கு புனர்வாழ்வு இல்லம் அமைத்தல்.

* 11683—டாக்டர். ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா —

ஆரணி தொகுதியில் முதியோர், உடல் ஊனமுற்றோர்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் புனர்வாழ்வு இல்லம் ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: சமூக நலத் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே முதியோருக்கு உதவித் தொகையும், உடல் ஊனமுற் றோருக்கு உதவித் தொகையும் உபகரணங்களும் அளிக்கப்படுவது உண்மை. ஆனால் இந்த உடல் ஊனமுற்றவர்கள், முதியோர்கள்